



## 200 க்கும் அதிகமான தொகுதிகளில் கழக அணி வெற்றி பெற வேண்டும் என்ற உறுதியுடன்

## கழக நிர்வாகிகள் பணியாற்றிடுவீர்! சாதனைகளை விளக்க தெருமுனைக் கூட்டங்கள் நடத்துங்கள்!

# ஒவ்வொரு வாக்காளரையும் நேரடியாகச் சென்று சந்தியுங்கள்!

**சென்னை – கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் நல உதவிகள் வழங்கி – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை!**

**சென்னை,ஜன.13-**

**சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில், மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு ஏற்பாட்டில் பொங்கல் விழா நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, கொளத்தூர், துறைமுகம், எழும்பூர், திரு.வி.க.நகர், அம்பத்தூர், வில்லிவாக்கம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த 4 ஆயிரத்துக்கும் அதிகமான கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

**அப்போது அவர், 2026-இல் 200-க்கும் அதிகமான தொகுதிகளில் கழக அணி வெற்றி பெற வேண்டும் என்ற உறுதியுடன் கழக நிர்வாகிகள் பணியாற்ற வேண்டும் என்று கூறி அனைவருக்கும் பொங்கல் நல் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.**

விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு வருவது என்றால், எப்பொழுதுமே எனக்குக் கூடுதல் மகிழ்ச்சிதான். எப்படியாவது மாதம் குறைந்தது ஒன்று அல்லது இரண்டு நிகழ்ச்சிகளை சேகர்பாபு அவர்கள் இந்தக் கிழக்கு மாவட்டத்தில் ஏற்பாடு செய்து விடுவார்.

### சமத்துவப் பொங்கல் நிகழ்ச்சி

எத்தனையோ பண்டிகைகள் இருக்கின்றன. வருடம் முழுக்க பண்டிகைகள் இருக்கிறது. எல்லா பண்டிகையையும் கொண்டாடுகிறோம். ஆனால், எல்லாவற்றையும் விட, நமது மனதிற்கு நெருக்கமான பண்டிகை எதுவென்றால், அது பொங்கல் நிகழ்ச்சிதான். இந்தப் பொங்கல் நிகழ்ச்சியும் சென்னை கிழக்கு மாவட்டமும் ஒன்று. பொங்கல் நம் பண்பாட்டுத் திருவிழா பொங்கல். அதைச் சிறப்பாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

எவ்வளவு சுற்றுப் பயணங்கள் இருந்தாலும் கிழக்கு மாவட்டத்திற்கு எப்போது வர வேண்டும் என்று கேட்டாலும் வர முடியாத சூழ்நிலையாக இருந்தாலும் என்னை அழைத்து வந்து விடுவார். அது தான் சேகர் பாபு அண்ணன் அவர்களின் தனித்துவம். நேற்று நம் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சரை வைத்து சமத்துவப் பொங்கல் நிகழ்ச்சியையும் மிகச் சிறப்பாக தலைவரின் கொளத்தூர் தொகுதியில் சிறப்பாக கொண்டாடினார்.

கிறிஸ்துமஸ், ரம்ஜான், தீபாவளி, தலைவரின் பிறந்தநாள், எனது பிறந்த நாள், முப்பெரும் விழா, கழகத்தின் பவள விழா, அவர் நல திட்ட உதவிகள் செய்யாத நாளே இல்லை. எனக்கு தெரிந்து அவரின் பிறந்தநாளுக்கு மட்டும்தான் விழா எடுக்கவில்லை என்று நினைக்கிறேன். நாம் ஒரு முடிவு செய்ய வேண்டும். அடுத்த வருடத்தில் நாம் எல்லாம் சேர்ந்து அவரின் பிறந்தநாளுக்கு விழா எடுக்க வேண்டும். அவருக்கு போட்டியாக நாம் நடத்த வேண்டும். அதை சென்னை கிழக்கு மாவட்டத்திலேயே நடத்த வேண்டும்.

### வேறு நாளே கிடையாதா?

நானும் தொடர்ந்து நான்கு நாட்களாக பல்வேறு மாவட்டங்களில் இன்றைக்கு சென்னை கிழக்கு மாவட்டம், நேற்று சென்னை மேற்கு மாவட்டம், இன்று காலை காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், நாளை மாலை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் எனத் தொடர்ந்து நான்கு நாட்களாக பொங்கல் விழாவை இவ்வளவு சிறப்பாக கொண்டாடுகிறோம் என்றால், இந்தப் பொங்கல் விழா தமிழர்களின் திருவிழா. நம் பண்பாட்டின் சின்னம் இந்தப் பொங்கல்.



அதனால்தான் இந்தப் பொங்கல் விழாவை நாம் கொண்டாடக் கூடாது என்று இரண்டு வருடங்களாக நம் ஒன்றிய அரசு திட்டமிட்டு ஒன்றிய தேர்வுகளை இதே பொங்கல் தினத்தன்று நடத்திக் கொண்டிருக்கிறது. 365 நாட்களில், தேர்வு நடத்துவதற்கு வேறு நாளே கிடையாதா? இதற்குத்தான் நம் தலைவர் அவர்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்துக்கொண்டு இருக்கிறார். தமிழ்நாட்டின் மீது அவர்களுக்கு அவ்வளவு கோபம்.

சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் நமக்கு மிகப்பெரிய வெற்றி. இந்த சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு கூடுதல் சிறப்பு என்னவென்றால் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருவார்கள். அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள், சகோதரர் கலாநிதி வீராசாமி அவர்கள், கழகத்தின் பொருளாளர் டி.ஆர். பாலு. மிகபெரிய வெற்றியைச் சென்ற முறை கிழக்கு மாவட்டம் கொடுத்து இருக்கிறது. தமிழ்நாட்டு மக்களும் கொடுத்தார்கள்.

சென்ற முறை நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்நாட்டில் ஒரு சீட்டாவது வாங்கி விடலாம் என்று மோடி அவர்கள் என்னென்னமோ செய்து பார்த்தார். பொங்கல் விழா எல்லாம் கொண்டாடினார். புகைப்படங்கள் எல்லாம் வெளிவந்தன. நான்கு நாட்கள் தமிழ்நாடு வந்து கன்னியாகுமரி விவேகானந்தர் மண்டபத்தில் தியானம் எல்லாம் செய்தார். ஆனால், தமிழ்நாட்டு மக்கள் மோடி அவர்களுக்கே பொங்கல் வைத்துவிட்டீர்கள்.

அந்தக் கோபத்தைத்தான் மோடி அவர்கள், நம் தமிழ்நாட்டின் மீது காட்டிக்கொண்டே இருக்கிறார். உதாரணத்திற்கு, இங்கு இருக்கின்ற ஆளுநர். நாம் தேர்தல் வேலைகளை செய்கிறோமோ? இல்லையோ? ஆனால், ஆளுநர் தி.மு.க-வுக்காக தேர்தல் வேலைகளை தினமும் செய்துகொண்டு இருக்கிறார்.

தலைவர் அவர்கள்கூட நகைச்சுவையாக சொன்னார்கள். ஒன்றிய அரசுக்கு எனது வேண்டுகோள். தயவுசெய்து தேர்தல் முடிகின்றவரை ஆளுநரை மாற்றி விடாதீர்கள். இந்த ஆளுநர் கடந்த நான்கு வருடங்களாக என்ன செய்து கொண்டு இருக்கிறார். அவர் என்ன மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரா? ஒன்றிய அரசின் நியமன பதவி, ஆளுநர் பதவி. எந்த பவரும் கிடையாது. நாம் என்ன கொடுக்கிறோமோ அதில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்க வேண்டும் அவ்வளவுதான் அவரின் வேலை.

### குலக்கல்வித் திட்டம்

தபால்காரர் வேலை. நாம் எழுதிக் கொடுப்பதை வந்து படித்துவிட்டுப் போக வேண்டும். ஆனால், எனக்குத் தெரிந்து சட்டமன்ற வரலாற்றிலே, சட்டமன்றத்திற்குள் வாக்கிங் சென்ற ஒரே ஆளுநர் யார் என்றால், நம் ஆர்.என்.ரவி அவர்கள் தான். வேகமாக வருவார், அதைவிட வேகமாக சென்று விடுவார். வருவதும் தெரியாது, போவதும் தெரியாது. அதற்கு அவர் என்ன காரணம் சொல்கிறார். `தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடக்கூடாது' என்று சொல்கிறார். தேசிய கீதம்தான் பாட வேண்டும். இதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியுமா?

இரண்டு வருடங்களுக்கு முன்பு, `தமிழ்நாட்டின் பெயரை மாற்ற வேண்டும்' என்று சொன்னார். `அது என்ன தமிழ்நாடு' இந்தப் பெயர் எனக்கு பிடிக்கவில்லை என்று சொன்னார். ஒட்டு மொத்த தமிழ்நாட்டு மக்களும் எதிர்ப்புத் தெரிவித்தவுடன் அதற்கு மன்னிப்பு கேட்டார்.

சிறிது நாட்களுக்கு முன்பு திருவள்ளுவர் சிலைக்குக் காவி வண்ணம் அடித்துவிட்டார்கள். இப்படி தமிழ்நாட்டின் அடையாளங்களைத் திருடுகின்ற வேலையை அவர்கள் செய்துகொண்டு இருக்கிறார்கள். `புதிய கல்விக்கொள்கை' என்று ஒன்றை கொண்டு வருகிறார்கள். `விஷ்வகர்மா கல்வி திட்டம்', அதுதான் சிறந்த கல்வி திட்டம்' என்று ஆளுநர் சொல்கிறார். `அதைச் செயல்படுத்த வேண்டும்' என்று சொல்கிறார். நம் முதலமைச்சர் முடியவே, முடியாது என்று சொல்லிவிட்டார்.

அந்தத் திட்டம் என்னவென்றால், `குலக்கல்வித் திட்டம்'தான் அது. அப்பா என்ன வேலை பார்க்கிறாரோ அதே வேலையைத்தான் மகன் பார்க்க வேண்டும் என்ற திட்டம். இந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியுமா?

### எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்

தமிழ்நாடு அரசுப் பள்ளியில் படித்த பல மாணவர்கள்தான் இன்றைக்கு உலகம் முழுவதும் உள்ள மிகப்பெரிய கம்பெனிகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். உயர் பொறுப்புகளில் இருக்கிறார்கள். அதுவெல்லாம் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. எரிச்சலைத் தருகிறது. இதற்கெல்லாம் யார் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும், நாம் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டு இருக்கிறோம்.

ஒரு எதிர்க்கட்சித் தலைவர் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமா? இல்லையா? ஆனால், ஒரு வித்தியாசமான எதிர்கட்சித் தலைவரை நாம் பெற்று இருக்கிறோம். திரு. எடப்பாடி பழனிச்சாமி, நேற்று முன்தினம் சட்டமன்றத்தில அவர் பேசும் போது சொல்கிறார். அவரது முதல் பிரச்சினை என்ன தெரியுமா? மிகவும் வினோதமான பிரச்சினை. பொதுவாக எதிர்க்கட்சித் தலைவர்கள் என்ன சொல்வார்கள். `நாங்கள் பேசுவதை தொலைக்காட்சியில் அதிகமாகக் காட்டுங்கள். எங்களின் சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுவதை தொலைக்காட்சியில் அதிகமாக காட்டுங்கள்' என்றுதான் பொதுவாகக் கேட்பார்கள்.

ஆனால், நம் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி என்ன தெரியுமா கேட்கிறார். `ஆளுநர் பேசுவதைத் தயவு செய்து காட்டுங்கள். ஆளுநர் தான் பேசவே இல்லையே. ஆளுநர் வந்துவிட்டுச் செல்வதையாவது காட்டுங்கள்' என்று சொல்கிறார். இப்படிப்பட்ட எதிர்கட்சித் தலைவரை, எங்கேயாவது பார்த்து இருக்கிறோமா. ஏன், ஒன்றிய பா.ஜ.க.வை பார்த்து அவ்வளவு பயம்.

### அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி

தொடர்ந்து நான்கு நாட்களாக எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் சம்பந்தி நெருங்கிய உறவினர் வீட்டில் ரெய்டு நடக்கிறது. இன்றுகூட தொலைக்காட்சியில் பார்த்தேன். கிட்டத்தட்ட 700 கோடி அளவிற்கு வரி இழப்பு நடந்திருக்கிறது. என்றைக்கு ரெய்டு விட்டார்களோ, அன்றைக்கே சொன்னேன். நிச்சயமாக அ.தி.மு.க-பா.ஜ.க கூட்டணி வந்துவிடும் என்று. சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் இரண்டு பேரும் பிரிந்து வந்தார்கள். இரண்டு பேரும் பிரிந்து வந்தாலும் ஓட ஓட அடித்து விரட்டினார்கள் தமிழ்நாட்டு மக்கள். இப்போது ஒன்றாக வரப் போகிறார்கள் நமக்கு வேலை சுலபம். இருந்தாலும், இன்னும் தீவிரமாக களத்தில் இறங்கி நம் தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும்.

### தெருமுனைப் பிரச்சாரங்கள்

அரசு இந்த நான்கு ஆண்டுகளில் செய்திருக்கின்ற சாதனைகளை அனைவருக்கும் விளக்க வேண்டும். பெரிய பெரிய கூட்டங்கள் எல்லாம் தேவையில்லை. தெருமுனைப் பிரச்சாரங்கள், ஒவ்வொரு வாக்காளரையும் நேரடியாக சந்தியுங்கள். இங்கு வந்திருக்கின்ற நிர்வாகிகளைக் கேட்டுக் கொள்வதெல்லாம் இன்னும் நமக்கு 14 மாதங்கள் தான் இருக்கின்றன.

ஒவ்வொரு வாக்காளரையும் குறைந்தது 4 முறையாவது நீங்கள் நேரில் சந்தித்து அவர்களிடம் நேரடியாக பேச வேண்டும். அவர்களின் குறைகளைக் கேளுங்கள். நிச்சயம் குறைகள் ஏதாவது இருக்கத்தான் செய்யும். அந்தக் குறைகளைக் கேட்டு அதை நிவர்த்தி செய்ய முடியுமா என்று பாருங்கள். உங்களால் முடிந்த குறைகளை நீங்களே நிவர்த்தி செய்யுங்கள். உங்களால் முடியவில்லை என்றால், நம் வட்ட கழகச் செயலாளர், பகுதி கழகச் செயலாளரிடம் சொல்லுங்கள். இல்லையென்றால், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இல்லை என்றால், அமைச்சர் இருக்கிறார் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அவர்களின் குறைகளைத் தீர்க்க முடியுமா என்று பாருங்கள்.

நிச்சயமாக இந்த வருடங்களில் நம் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று பல சாதனைகளை பல திட்டங்களைச் செய்துள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் நம் அரசின் திட்டங்களால் பயன்பெறும் ஒருவராவது இருப்பார்.

### மக்கள் நலனுக்கு ஆறு திட்டங்கள்

உதாரணத்திற்கு ஆறு திட்டங்களை மட்டும் இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

1. மகளிருக்கு கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம்

2. கல்லூரி பெண்களுக்கு புதுமைப்பெண் திட்டம். மாதம் ஆயிரம் ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்கில் வழங்கப்படுகிறது.

3. ஆண்களுக்கு தமிழ்ப் புதல்வன் திட்டம்

4. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை உருவாக்கித் தர நான் முதல்வன் திட்டம்.

5. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்.

6. மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம்

அதேபோல் எத்தனையோ திட்டங்கள் `இல்லம் தேடி கல்வி', 'மக்களைத் தேடி மருத்துவம்' போன்ற திட்டங்கள் எல்லாம் நம் `திராவிட மாடல் அரசு' செயல்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டங்களை எல்லாம் மக்களிடம் தொடர்ந்து பேசி, அவர்களுக்கு ஞாபகப்படுத்தி அவர்களிடம் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தில் ஒரு சில குறைகள் இருக்கின்றன. இரண்டு நாட்களுக்கு முன்பு சட்டமன்றத்தில் என்னிடம் கேட்டார்கள். எனது சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சகம்தான் கலைஞர் மகளிர் உரிமைத்தொகையைக் கண்காணிக்கிறது.

அப்பொழுது நான் முதலமைச்சரின் அனுமதியோடு சொன்னேன். இன்னும் மூன்றே மாதங்களில் மீண்டும் அந்த விண்ணப்பங்கள் பெறப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு நிச்சயம் 100 சதவிகிதம் எந்தவித குறைகளும் இல்லாமல் தகுதியுள்ள அனைத்து மகளிருக்கும் அந்த கலைஞர் மகளிர் உரிமைத்தொகையைக் கொடுப்போம் என்று முதலமைச்சரின் உத்தரவை ஏற்று, சட்டசபையிலேயே பேசி இருக்கிறேன். இதையெல்லாம் மக்களிடத்தில் நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். கண்டிப்பாக, நீங்கள் அதை செய்வீர்கள்.

### ஆறு தொகுதிகள் உறுதி

நம் தலைவர் அவர்கள் நமக்கு இலக்கு கொடுத்து இருக்கிறார். குறைந்தது 200 தொகுதி வெற்றி பெற வேண்டும் என்று சொல்லி இருக்கிறார். நிச்சயமாக அந்த 200 தொகுதியில் கிழக்கு மாவட்டத்தில் இருக்கின்ற ஆறு தொகுதி உறுதியாகி விட்டது. அதில் முதல் தொகுதி கொளத்தூர் தொகுதி.

நான்கூட சேகர்பாபு அண்ணனிடம் அடிக்கடி நகைச்சுவையாக சொல்லி இருக்கிறேன். சேப்பாக்கம்-திருவல்லிக்கேணியில்தான் நிறைய நலத்திட்ட உதவிகள் நடக்கிறது. அதனால் நிறையபேர் அங்கு வருகிறார்கள் என்று. எனக்கு கிழக்கு மாவட்டத்தைப் பார்க்கும் பொழுது, நான் அடுத்த முறை இந்த ஆறு தொகுதிகளில் ஏதாவது ஒரு தொகுதிக்கு வந்துவிட வேண்டும் என்று சில நேரங்களில் எண்ணியது உண்டு.

அப்படிப்பட்ட சிறப்பான இந்த சென்னை கிழக்கு மாவட்டத்தில் உங்களின் உழைப்பின் காரணமாக வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதி என்ற இலக்கை நிச்சயம் நாம் அடைய வேண்டும்.

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்

இப்போது 2-ஆம் தேதி ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் நடக்க இருக்கிறது. அ.தி.மு.க போட்டி போடலாமா? வேண்டாமா என்று யோசித்துக் கொண்டு இருந்தார்கள். தலைவர் அடுத்த நாளே அறிவித்தார். இவர்தான் எங்கள் வேட்பாளர். காங்கிரஸ் கிடையாது. நாங்கள்தான் நிற்கிறோம். காங்கிரஸ் கூட்டணி எங்களின் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பாக, சந்திரகுமார் அவர்களை அறிவித்த உடனே எல்லோரும் நாங்கள் நிற்க போவதில்லை என்று பின்தங்கி விட்டார்கள். தி.மு.க-வின் வெற்றி உறுதி செய்யப்பட்ட ஒன்று.

இதுவரைக்கும் நம் தலைவர் அவர்கள் தலைவராகப் பொறுப்பேற்று சந்தித்த 10 தேர்தலிலும் வெற்றி. அதனால்தான் தலைவர் அவர்கள் ஒருமுறை சொன்னார். எடப்பாடி பழனிச்சாமி கிடையாது, `10 தேர்தல் தோல்வி' பழனிச்சாமி என்று சொன்னார். எனவே இந்தச் சட்டமன்ற தேர்தல் முடிந்தவுடன் `11 தோல்வி பழனிச்சாமி' என்றுதான் மக்கள் அவரை அழைக்கப் போகிறார்கள்.

எனவே, நிச்சயம் நம் தமிழ்நாட்டு மக்கள் என்றைக்கும் நம் தலைவர் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், நம் கூட்டணிக்கும் என்றென்றைக்கும் எப்பொழுதும் உறுதுணையாக இருக்கிறார்கள். நாம் எப்பொழுதுமே அவர்களுக்கு உறுதுணையாக இருப்போம்.

### கழகத்தின் தொண்டன்

கிறிஸ்துமஸ் ஆக இருந்தாலும் சரி, பொங்கலாக இருந்தாலும் சரி, தீபாவளியாக இருந்தாலும் சரி, மழையாக இருந்தாலும் சரி, வெள்ளமாக இருந்தாலும் சரி களத்தில் மக்களோடு மக்களாக இருப்பவர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டன் என்று கூறிக்கொண்டு, உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் எனது தமிழர் திருநாளாம் பொங்கல் வாழ்த்துகளை கூறிக்கொண்டு, இந்த சிறப்பான வாய்ப்பை அளித்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கும், வந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் அவர்களுக்கும், வந்திருந்த அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மேயர் சகோதரி பிரியா அவர்களுக்கும், பகுதி கழகச் செயலாளர்களுக்கும், வட்ட கழக செயலாளர்களுக்கும், அனைத்து அணிகளின் செயலாளர்களுக்கும், கழகத்தின் கடைக்கோடித் தொண்டர்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் எனது பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்து விடை பெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம்கவி, பரந்தாமன், ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, தலைமைச் செயற்குழு உறுப்பினர், சேமிப்புக் கிடங்கு வாரிய தலைவர் ரங்கநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், மாவட்ட கழக நிர்வாகிகள் ஏகப்பன், மகாதேவன், புனிதவள்ளி எத்திராசன், ஆசாத், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.எஸ்.என்.நாதன், சந்துரு, பி.கே.மூர்த்தி, மகேஷ்குமார், விஜயகுமார், பகுதி கழகச் செயலாளர்கள் சுதாகர், வேலு, ஐ.சி.எப்.முரளி, நாகராஜன், டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், வே.வாசு, கோபி ஜெயின், எஸ்.ராஜசேகர், முரளி, சாமிக்கண்ணு, தமிழ் வேந்தன், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் உமாகாந்தன், பரிதி இளம்சுருதி, ஷேக் அப்துல்லா, சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர் நரேந்திரன், கிருஷ்ணமூர்த்தி, ஓ.எ.நாகலிங்கம், முனியாண்டி, பொதுக்குழு உறுப்பினர்கள் கோ.மணி, நிர்மலா தேவி, வட்டக்கழகச் செயலாளர்கள் பாபு, விஜயகுமார், மண்டல குழுத் தலைவர்கள் சரிதா மகேஷ்குமார், ஸ்ரீராமலு, மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் சாந்தகுமாரி, மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி ஸ்ரீதர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெகதீஷ், தனசேகர், வினோத், பிரபு, சங்கர் நானா உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.